பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 14 திங்கட்கிழமை 28-05-2001 தொலைபேசி: 3378 ஒலி: 160

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2014)

### படையினர் கேடயமாக பயன்படுத்துவதை தவிர்க்க

## தென்மராட்சியில் மீளக் குடியமர வேண்டாமென பொதுமக்களிடம் புலிகள் வேண்டுகோள்

(வவுனியா)

தென்மராட்சிப் பகுதியில் மக்களை மீளக்குடியமர வேண்டாமென விடுதலைப் புலிகள் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற 'அக்கினிச்சுவாலை 1' படை நடவடிக்கையின் பின் அப்பகுதியில் மக்களை குடியேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதை அடுத்தே தென்மராட்சியில் மீளக்குடியமர வேண்டாமென்று விடுதலைப்புலிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அவர்கள் விடுத்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

அக்கினிச்சுவாலை-1 படை நடவடிக்கை தோல்வி அடைந்த நிலையில், தென்மராட்சியில் இராணுவத்தை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில் மக்களை கேடயமாகப் பாவிப்பதற்காகவே மக்களை மீளக்குடியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

தென்மராட்சியின் சகல பகுதிகளிலும், குடியமரலாம் என்றும் கடைகளைத் திறப்பதற்கு வருமாறும் இராணுவத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இதேவேளை தென்மராட்சிப்பகுதிகளைப்பார்வையிடச் செல்லும் மக்கள் தமது

(8-ம் பக்கம் பார்க்க)

### உண்ணாவிரதம் முடிவுற்றது

(மந்திகை)

வடமராட்சி மீனவர்களினால் நேற்றுமுந்தினம் ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரத போராட்டம் நேற்றுமாலை 5மணிக்கு முடிவுக்குவந்துள்ளது.

ஈ.பி.டி.பியின் உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளர் பரஞ்சோதிரவீந்திரன் வழங்கிய உறுதிமொழியையடுத்து ..ந்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் எஸ் தவரத்தினம் உண்ணாவிரதத்தை முடித்துவைத்தார். (ந-5)

## புலிகள் மீதான தடையை நீக்குவதில்லை

# அரசின் அறிவிப்பால் எந்நேரமும் மோதல் வெடிக்கும் அபாயம்!

### இருதரப்பும் தயார் நிலையில்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தம் மீதான தடையை நீக்குமாறு விடுத்திருந்த கோரிக்கையை அரசு நிராகரித்ததை அடுத்து இராணுவத்தினருக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே பாரிய யுத்தம் ஒன்று வெடிக்கலாமென்று இராணுவ ஆய்வாளர்கள் ஆருடம் தெரிவித்துள்ளனர்.

இப்பாரிய மோதல் தென்மராட்சியிலா அல்லது இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசத்திலா? அல்லது கிழக்குமாகாணத்திலா என்பதில் இராணுவ ஆய்வாளர்கள் பல தரப்பட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதில்லை என்று அரசு அறிவித்ததைத் தொடர்ந்து அரச படைக்கும் புலிகளுக்குமிடையில் பாரிய மோதல்கள் ஏற்படும் அறிகுறிகள் தென்படுவதாக இராணுவ ஆய்வாளர்கள் பல்வேறு ஊகங்களுக்கு மத்தியில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இராணுவ ஆய்வாளர்களின் இந்த கருத்துக்கு வலுவூட்டுவதாக கடந்த வாரங்களில் அடுத்தடுத்து இரு பாரிய கண்ணி வெடித்தாக்குதலை வவுனியாவிலும், தம்பலகாமத்திலும் புலிகள் நடாத்தி படையினருக்குப் பலத்த இழப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

ஆனையிறவுப் பெருந்தளத்தைக் கைப்பற்றும் நோக்குடன் அரசு தென்மராட்சிப் பகுதியில் ஆரம்பித்த அக்கினிச் சுவாலை - 1 படை நடவடிக்கை அரசுக்கு தோல்வியைக் கொடுத்த போதும் அடுத்த பாரிய தாக்குதல்களுக்கான முஸ்தீபை மேற்கொள்வதில் அரசு கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது.

இராணுவத்தினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே வெடிக்கவுள்ள பாரிய மோதல் சம்பவங்கள் வடக்குகிழக்குமாகாணத்தை மையப்படுத்தியதாகவே அமையவுள்ளதாகத் தெரிகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

### புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த 28ம் திகதி செட்டிக்குளம்பகுதியில் இராணுவத்

(8ம் பக்கம் பார்க்க)

## அரசின் அறிவிப்பால் தமிழ்க் கட்சிகள் சீற்றம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதில்லை என்று அரசு அறிவித்துள்ளதை தொடர்ந்து இனப்பிரச்சினை தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தையில் அரசு இதயசுத்தியுடன் நடந்து கொள்ளவில்லை என தமிழ் கட்சிகள் தமது அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு புலிகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அரசு நிராகரித்து நேற்றுமுந்தினம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது அந்த அறிக்கை குறித்து தமிழ்க்கட்சிகளான ரெலோ, தமிழர்விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் ஆகிய கட்

(8-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை பேச்சுக்கு தடையாகாது!

### அமைச்சர் டக்ளஸ் கருத்து

[யாழ்ப்பாணம்]

விடுதலைப்புலிகள் மீதான தடை பேச்சுவார்த்தைக்குத் தடையாக இருக்கப் போவதில்லை என வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மீதான தடையை பேச்சுவார்த்தைக்கு முன்னதாக நீக்கப் போவதில்லை என அரசு விடுத்த அறிவிப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் மேலும் கூறுகையில்,

விடுதலைப்புலிகள் இனப்

[8ம் பக்கம் பார்க்க]

## புலிகளின் தடையை நீக்குவதில்லை

# அரசாங்கம் விடுத்த அறிக்கைக்கு ஐ.தே.கட்சி மௌனம் சாதிக்கிறது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடைநீக்கம்தொடர்பாக இதுவரை ஐக்கிய தேசியக்கட்சி மௌனமாக இருப்பதினால், ஐக்கிய தேசியக் கட்சியின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளது: என்று தமிழ்கட்சி வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன:

ஐக்கியதேசியக் கட்சியின் இந்த மௌனம்தொடர்பாக அவ்வட்டாரங்கள் மேலும் கருத்து வெளியிடுகையில்,

அரசு மீது ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவர உத்தேசித்துள்ள நம்பிக்கைஇல்லாத் தீர்மானத்திற்கு தமிழ்க்கட்சிகளின் ஆதரவைத்திரட்டுவதற்காகவே இவ்விடயத்தில் மதில்மேல் பூனைபோல இருப்பதாகவும் மறுபுறத்தில் பௌத்த சிங்கள பேரினவாதிகள் கடும் சீற்றத்திற்குஆளாக வேண்டிவரும் என்ற அச்சம் காரணமாகவும், கட்சிக்குள் நிலவும்பூசல்களை மூடிமறைக்கவுமே ஐக்கியதேசியக்கட்சி மௌனம் சாதிப்பதாகவும் கருதப்படுகிறது,

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கைஇல்லாத்தீர்மானத்துக்கு கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு நிலவுவதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன; (ம)

## வவுனியா நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு வருவதாக வவுனியா செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே எந்நேரமும் பாரிய யுத்தம் ஒன்று வெடிக்கலாம் என்ற முன்னேற்பாடாகவே வவுனியாவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் உள்ள இராணுவமுகாம்களின்பாதுகாப்பு புதியபாணியில் பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் உயரதிகாரிகள் தங்கியுள்ள முகாம்களில் நிலந்துக்கடியில பங்கர்கள் வெட்டப்பட்டு பலப்படுத்தப்படுவதாகவும் தெரியவருகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தை நீண்டதூரம் பிரதிகூலிய நிலையில்யுத்தம் எந்நேரமும் வெடிக்கலாம் என்ற செயற்பாட்டிலேயே பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படுகிறது. (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தொடரும் சிறுவர்மீதான துன்புறுத்தல்

# விரைவில் சட்ட நடவடிக்கை

## பருத்தித்துறை நீதிபதி தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

எமது பிரதேசங்களில் சிறுவர்கள் பல்வேறு காரணங்களுக்காக சமூகவியல், பொருளாதார பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள். இவ்வாறானதுன்புறுத்தல் சம்பவங்களுக்கு உரிய சட்ட நடவடிக்கை எடுத்து அவர்களது உரிமைகள் பேணப்படுவது அவசியமான ஒன்றாகும் என பருத்தித்துறை நீதிபதி ஏ. பிறேம்சங்கர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகமும் சிறுவர் உரிமைகளும் என்ற பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே நீதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார் இது. தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது.

எமது பிரதேச ஆன்மீகம் தொடர்பான பாதையில் வளர்ச்சி அடைந்தால்இவ்விதமான வக்கிர எண்ணங்கள் அகற்றப்பட்டு நல்ல சமூகம் உருவாக வாய்ப்பாகஇருக்கும் இதற்கு எல்லோரும் பாடுபட வேண்டும் என்றார். மேற்படி பயிற்சிப் பட்டறையில் நீதிபதி ஏகநாதன் மேலதிக அரசாங்கஅதிபர் து. வைத்திலிங்கம், சிறுவர் உரிமைகள் திட்டமிடல் அதிகாரி ஜெனொவா அல்பிரட், குழந்தை வைத்திய நிபுணர் திருமதி கலா சோமசுந்தரம் மகப்பேற்று வைத்திய நிபுணர்ஜி. பவானிசட்ட வைத்திய நிபுணர் எஸ் வி. சிறிஇராஜேஸ்வரன், பேராசிரியர் தயா சோமசுந்தரம் மற்றும் பிரதேச செயலர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் இவ் வைபவத்தில் தில்கலந்து கொண்டார்கள்.

(உ-9)

## ஆங்கில பயிற்சி

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு அபிவிருத்தித் தொண்டர்களின் ஆங்கில அறிலை வளர்க்கும் முகமாக ஆங்கில பயிற்சி வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

சனி, ஞாயிறு தினங்களில் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் இந்த ஆங்கில வகுப்புக்கள் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஈ. பி. டி. பியின் தெல்லிப்பழைத் தொகுதி அமைப்பாளர் சிவகுமார் (வேலு) தெரிவித்துள்ளார்.

## உரிமத்தகடு வழங்கல்

(நெடுந்தீவு)

மாட்டு வண்டி, துவிச்சக்கர வண்டி, வானொலி, தொலைக்காட்சிபோன்றவற்றுக்கு 2001 ஆம் ஆண்டுக்கான உரிமங்கள் நெடுந்தீவுப் பிரதேச சபையினால் தற்சமயம் வழங்கப்பட்டு வருகின்றன.

(உ-81)

## அமைச்சர் வேண்டுகோள்

(கொழும்பு)

அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு விடும் என்ற பயப்பீதியில் காலத்தை வீணடிக்காது அதன் சகல அபிவிருத்திக் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் ஏ பி. சேமசிங்கவர்த்தகக் கட்டடத் திறப்பு விழா ஒன்றில் பேசும் போது அரசாங்கத்துறை அனைத்து அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த ஏழு ஆண்டுகளாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை பதவி கவிழ்க்கும் வீண் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமை குறித்தும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

(உ-5)

## வருடாந்த உற்சவம்

(துன்னாலை)

மந்திகை கண்ணகைஅம்மன் ஆலய உற்சவம் இன்று ஆரம்பமாகி 9 தினங்கள் இடம் பெறவுள்ளன.

(உ-41)

## அடையாள அட்டை ஒப்படைப்பு

(மந்திகை)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த ஞானசோதி ரகுநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, பாடசாலை அடையாள அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் கண்டெடுக்கப்பட்டு மந்திகை ஈ. பி. டி. பி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவரை அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(செ-23)

## இராசி பலன்

28-05-2001
(வைகாசி 14 திங்கள்)
ஷஷ்டி மு. இ-9-35
பூசம் காலை - 6-45
ஆயிலியம் வைகறை-5.08
இராகு- 7-22—8-52
சுபநேரம்- 11-52—1-22

**மேடம்**
சுப செய்தி, பணியாளர் உதவி, முயற்சி வெற்றி, உத்தியோகச் சிறப்பு.

**இடபம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு. தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, பொருள்வரவு.

**மிதுனம்**
வீண்பிரச்சினை, பிரயாண பயம், தொழில் நன்மை, காரிய தாமதம்.

**கடகம்**
காரியம் கைகூடும், பகைவர் விலகுவர், அதிகாரிகள் வெறுப்பு, திடீர் பயணம்.

**சிங்கம்**
கட்டுப்பபாடு, வயிற்றுக் கோளாறு, புதிய திட்டம், அரசநன்மை.

**கன்னி**
உறவினர் மனஸ்தாபம், மனப்பதட்டம், காரிய அனுகூலம், விரும்பாத உறவு

**துலாம்**
மனப்பயம், தாழ்வுநிலை, கரரிய தாமதம், திடீர் நன்மை.

**விருச்சிகம்**
தனவரவு, இனிய சம்பவம் வாக்கு மேன்மை, முயற்சி வெற்றி.

**தனுசு**
வாகன வசதி, சுவாரஸ்யம் முயற்சி. கைகூடும், நல்ல உணவு கிடைத்தல்.

**மகரம்**
மனச்சஞ்சலம், முயற்சி வெற்றி, பொருள் விரயம், பிதா சிந்தை.

**கும்பம்**
பெரியோர் ஆசி, கற்பனை மிகுதி, முயற்சிநன்மை, நண்பர்கள் உதவி.

**மீனம்**
வாக்குக் கலகம், மதிப்பு குறைவு, காரிப தாமதம், மோகம்.
(பழைய நேரப்படி கணிக்கப்பட்டது.)

வளவன்

## ஊடகவியலாளர் சங்கம் கவலை

ராவயபத்திரிகைக் காரியாலயம் மீதுகடந்தவியாழக்கிழமை நடாத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் குறித்து யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கம் கவலைவெளியிட்டுள்ளது.

இலங்கையில் பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவதும் கொலைசெய்யப்படுவதும் குண்டுத்தாக்குதல் மூலம் அச்சுறுத்தப் படுவதையும் நிறுத்தி பத்திரிகையாளர்களுக்கானபாதுகாப்புஉறுதிப்படுத்த வேண்டும் என்று யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

(க-43)

## பொலிஸ்நிலையத்தில் அ. அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

வெவ்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கந்தசாமி வசந்தமலர் (தோப்பு, கொலனி) என்பவரதுவிஷேட அ அட்டையும், செல்லையா ரவீந்திரன் (9/3, வெள்ளாந் தெரு) என்பவரது விஷேட அடையாள அட்டையும்யாழ் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்களை பெற்றுக் கொள்ளுமாறு யாழ் பொலிஸார் கேட்டுள்ளனர்.

(உ-2,10)

---

## 47வது நாள் நினைவலைகள் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
20
02
1953



மறைவு
12
04
2001

திருமதி

### இந்திரசேனா கனகநாயகம்

(இந்திரா அக்கா)

உற்றாரை உறவினரை ஊராரைப் பேணி எங்கள்
சொத்தாக இருந்தாய் இவ்வுலகில் மேலுலக
வித்தாகப் போன பின்னும் எம் மனதில்
விருட்சமாய் வாழ்வாய் வேரூன்றி!

உங்கள் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இணுவைச் செகராசசேகரனைப் பிரார்த்திக்கின்றோம். இன்று (28-05-2001) திங்கட்கிழமை எங்களது இல்லத்தில் திருமதி இந்திரசேனா கனகநாயகம் அவர்களின் வீடடுக் கிருத்திய நிகழ்வு நடைபெறும். அத்தருணம் அவருடைய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன வைபவத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுச் கொள்கின்றோம்.

அன்னாரின் துயர் பகிர்வில் பங்கு பற்றியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளிலும் இறுதியாத்திரையிலும் கலந்து கொண்டு எமக்கு பல வழிகளிலும் ஆறுதல் கூறியவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!. ஓம் சாந்தி!!!

**பிற்குறிப்பு:-** அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் தயவு செய்து இவ்வீட்டுக் கிருத்திய அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்றுக் கொண்டு வீட்டுக் கிருத்திய நிகழ்வில் தவறாது பங்குபற்றும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

கணவர்: **விநாசித்தம்பி கனகநாயகம்**
(முன்னைநாள் காலி வர்த்தகர்

சகோதரர்: **ஏ. சி. சண்முகலிங்கம்**
(பிரதி அதிபர் சங்குவேலி தமிழ்க் கலவன் பாடசாலை, உரிமையாளர் சண் யோ கூல்பார் சுன்னாகம்)

**திருமதி சந்திராதேவி சண்முகலிங்கம்-இணுவில்**

செட்டிவளவு லேன்,
''துரைமலர் பொய்கை''
இணுவில் மேற்கு,
இணுவில்.

(கி/2036)

---

## 47 வது நாளில் நினைவு அஞ்சலி

திருமதி

### இந்திரசேனா கனகநாயகம்

(இந்திரா)

அவர்களின் மறைவு அன்னாரின் குடும்பத்திற்கு பேரிழப்பாகும்.

குடும்பத் தலைவியை இழந்து தவிக்கும் அவரது கணவன், சகோதரர்கள் மற்றும் நண்பர்கள் உறவினர்களுடன் துயரில் பங்கு கொண்டு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

சி. புவனேந்திரன்

சைவப் பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில்.

[கி-2037]

---

## இதய அஞ்சலி

கலாபூஷணம்

### ஆறுமுகம் ஜீவரட்ணம் ஸ்தபதி

அவர்களின் மறைவு கலை உலகிற்கு பேரிழப்பாகும் **126 சித்திரத் தேர்களை** இந்து ஆலயங்களுக்கு அர்ப்பணித்த ஒப்பற்ற கலைஞனை இழந்து சொல்லொணா துயரில் மூழ்கியுள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொண்டு ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**பிரம்மசிறி சு. ஸ்ரீஸ்கந்தராசக் குருக்கள்**
பிரதம குரு - கோண்டாவில் மேற்கு,
மகாகணபதிப்பிள்ளையார் தேவஸ்தானம்.
கோண்டாவில் மேற்கு
ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார்
தேவஸ்தானம்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(கி-2038)

# மகளிரின் உரிமைகளை மறுக்க முயல்பவர்கள்

# மனித நேயத்தை மறந்தவர்கள் ஆவார்கள்

## சறோஜா சிவச்சந்திரன் வலம்புரிக்கு பேட்டி

அண்மையில் ஜனாதிபதி விருதினைப் பெற்றவர்களுள் ஒருவரான மகளிர் அபிவிருத்து நிலையத்தின் தலைவி சறோஜா சிவச்சந்திரன் 'வலம்புரிக்கு' வழங்கிய செவ்வி இங்கு பிரசுரமாகிறது. (ஆ-ர்)

செவ்வி : ரீ. ரீ. மயூரன்

மகளிர் அபிவிருத்தி நிலையத் தலைவி சரோஜா சிவச்சந்திரன் அவர்களிடம் ஜனாதிபதி விருது பெற்ற அனுபவம் பற்றியும், எமது பிரதேசத்தில் 'பெண்கள் நிலையும்' அதில் அவரது ஈடுபாடு பற்றியும் அறியும் நோக்குடன் செவ்வி காணப் பட்டது.

● வலம்புரி:-
அண்மையில் உங்களுக்குக் கிடைத்த ஜனாதிபதி விருது பற்றிச் சற்றுச் சொல்லுங்களேன்.....

★ சறோஜாசிவச்சந்திரன்:-
மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் சிறப்பாக பணியாற்றியமைக்காக 2000 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி விருது எனக்குக் கிடைத்தமையை இட்டு மகிழ்வடைகிறேன். அத்துடன் யாழ்ப்பாணத்தில் இருந்து முதன் முதலாக விருதைப்பெற்ற ஒரு அரசசார்பற்ற நிறுவனம் என்ற வகையிலும் நான் பெருமை யடைகிறேன்.

● வலம்புரி;-
அந்த விருது வழங்கல் நிகழ்வின் அனுபவம் எவ்வாறு அமைந்தது?

★ ச சி:-
ஜனாதிபதி விருது வழங்கும் வைபவம் மொனராகலையில் இடம்பெற்றது. மகளிர் விவகார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட மகளிர் தின விழாவில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வின் அமைப்பாளராக மகளிர் விவகார அமைச்சர் சுமேதா ஜயசேன பங்கேற்றுக் கொண்டார். பெருந்திரளான மக்களுக்கு மத்தியில் நடைபெற்ற இவ்விழா ஒரு வித்தியாசமான அனுபவத்தைத் தந்தது;

● வலம்புரி:-
மகளிர் அபிவிருத்தி அமைப்பினது நோக்கம், செயற்பாடு இவைபற்றி வாசகர்களுக்கு சற்றுச் சொல்லுங்களேன்...?

★ ச சி:-
யாழ். குடாநாட்டில் எங்கள் அமைப்பு 1988 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம், பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் பெண்கள் தங்களுடைய சுய தேவைகளை தாங்களாகவே பூர்த்தி செய்யும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களது உரிமைகளை அவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதாகும். குறிப்பாக இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரை பெண்களுக்குப் பல தேவைகள் எழுந்துள்ளன. உதாரணமாக அவர்களது சுயமான வாழ்வின் உரிமைகளை நிலை நாட்ட வேண்டிய தேவை, அவர்களது வாழ்வின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தேவை, அவர்களது பிரச்சினைகளை வெளி உலகிற்கு தெரியப்படுத்த வேண்டிய தேவை, அத்துடன் பெண்கள் என்ற தனித்துவமான இருப்பினை நிலை நிறுத்தும் தேவை என்பன தற்போது எமது பெண்களுக்கு அவசியமான தேவைகளாகும்; இந்தச் சிறப்பான அம்சங்களைப் பெற்றுக் கொடுப்பதில் எமது அமைப்பு தற்போது முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது. இவற்றில் முக்கியமானதாக எங்கள் இலவச சட்டப் பிரிவைக் குறிப்பிடலாம். அத்துடன் பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் எமது அமைப்பு ஈடுபட்டு வருகிறது. ஆணாதிக்கத்தின் போக்கால் பல்வேறு துன்பங்களை அனுபவிக்கின்ற பெண்களுக்கு எமது இலவச சட்ட ஆலோசனைப் பிரிவின் மூலம் அவசியமான உதவிகளை வழங்கி வருகின்றோம். இதில் பல பெண்கள் பலனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

> சீதனப் பிரச்சினை என்பது ஒரு சமூகச் சீர்கேடு. ஒரு குடும்பத்தில் ஆணும் பெண்ணும் சமமான உரிமையுடன் பிறந்தாலும் பெண் மட்டும் விலை பேசப்படுவது நியாயமற்ற ஒன்றாகும். ஆகவே இருதரப்பும் தமாகத்திருந்தி சிறப்பான வாழ்க்கைக்கு அவசியம் அன்பும், பண்பும் நல்ல மனமுமே தவிர பணம் அல்ல என்ற உண்மையை என்று உணர்வார்களோ அன்று தான் இப் பிரச்சினைக்கு ஓர் முடிவு கிட்டும்.

● வலம்புரி:-
ஆணாதிக்கத்தின் போக்கால் பெண்கள் பல்வேறு துன்பங்களுக்குள்ளாகிறார்கள் என்று கூறினீர்கள் இங்கு 'ஆணாதிக்கம்' என்ற பதத்தின் மூலம் நீங்கள் சுட்டுவது எதனை?

★ ச. சி:- ஆணாதிக்கம் என்று கூறும் போது ஆண்கள், பெண்கள் என்று பிரித்து முழு ஆண்களினதும் ஆதிக்கம் என்று இங்கு நான் கூற வரவில்லை. இப்போதெல்லாம் பெண்கள் உரிமைகள் பற்றி பேசுவதில் ஆண்களும் கணிசமான அளவு பங்கெடுத்து வருவதனை பார்க்கக் கூடியதாக உள்ளது. ஆனால் எமது பிரதேசத்தை பொறுத்தவரை இந்த அளவு குறைவென்று தான் கூற வேண்டும். இந்த பெண்கள் இயக்கம் மற்றும் பெண்கள் உரிமை என்பது கலாசாரத்தைப் பாதிக்கும் ஒரு விடயமாக சில ஆண்கள் கருதுகிறார்கள். அவ்வாறு ஒரு பெண் தன் உரிமைகளை பெறுவதற்கு தடையாக உள்ள ஆண்வர்க்கத்தினைத்தான் இங்கு நான் ஆணாதிக்கம் என்று கூறுகின்றேன்.

● வலம்புரி:- எமது பிரதேசத்தில் பல்வேறு காரணங்களால் அல்லலுறும் பெண்களுக்கு உங்கள் இலவச சட்ட ஆலோசனைப் பிரிவு எத்தகைய உதவிகளை வழங்குகிறது என்பதனை சற்று விரிவாகக் கூறுவீர்களா?

★ ச. சி:-
எமது சட்ட ஆலோசனைப் பிரிவிலே இரண்டு சட்டத்தரணிகள் கடமையாற்றி வருகிறார்கள், இந்தப்பிரிவிலே பெண்கள் தமது பிரச்சினைகளைக் கூறி, அவர்கள் தாமாகவே நீதி மன்றத்திற்குச் செல்லாது தங்களது பிரச்சினைகளைத்தீர்க்கும்வாய்ப்பு உள்ளது இதனால் ஏராளமான பெண்கள் அதாவது நீதிமன்றத்திற்கோ அல்லது பொலிஸ் நிலையத்திற்கோ செல்ல முடியாத, செல்ல வெட்கப்படுகிற பெண்கள் தங்களது பிரச்சினைகளை இங்கே எங்களது இலவச சட்ட ஆலோசனைப் பிரிவில் சொல்லி அதன் மூலம், தங்களது வீட்டு வன்முறைகளுக்கோ அல்லது சமூக வன்முறைகளுக்கோ தீர்வு காணக் கூடிய வாய்ப்பு உள்ளது. எனவே பெண்களுக்கு எந்த வகையிலாவது அநீதி இழைக்கப்பட்டால் அவர்கள் எம்மை நாடி மேற்படி சேவையை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை இங்கு சொல்ல விரும்புகிறேன்.

● வலம்புரி :-
எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை பெண்களுக்குள்ள பிரச்சினைகளுள் முதன்மையாகக் காணபபடுவதுசீதனப் பிரச்சினை, சமூக சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் இப்பிரச்சினையை இல்லாதொழிக்க உங்களது அமைப்பு எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது? அல்லது முன்னெடுக்கவுள்ளது?

★ ச.சி :-
ஆம். நிச்சயமாக சீதனப் பிரச்சினை என்பது ஒருசமூகச் சீர்கேடு; ஒரு குடும்பத்தில் ஆணும், பெண்ணும் சமமான உரிமையுடன் பிறந்தபோதும் பெண் மட்டும் விலை பேசப்படுவது நியாயமற்ற ஒன்றாகும். இன்று பெண்கள் எவ்வளவுதான் படித்து பட்டங்கள் பெற்றாலும் சமமான தகுதி உடையவனை மணம் முடிக்க அதிக பணம் தேவைப்படுகிறது. பெரும்பான்மை ஆண்கள் கூட தாம் அதிகம் படித்தால் அதிகளவில் 'ரொக்கம்' திரட்டலாம் என்ற மன நிலை நிச்சயமாக களையப் பட வேண்டிய ஒன்றாகும், இந்தச் சீதனப் பிரச்சினையை இல்லாதொழிக்க வேண்டுமேயானால் இருதரப்புமே மனம்மாறுதல்அவசியமாகும். இந்தப் பிரச்சினையை சட்டத்தின் மூலமாகவோ அல்லது விழிப்புணர்வுக் கூட்டங்களின் மூலமாகவோ இல்லாதொழிக்க முடியாது. இந்தியாவில் சீதனத்தடைச் சட்டம் கொண்டு வந்தார்கள்: ஆனால் அதனை நடைமுறைப் படுத்துவதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன; ஆகவே கொடுப்பவர்களும். வாங்குபவர்களும் தாமாகவே திருந்தி வாழ்க்கைக்கு அவசியம் அன்பும், பண்பும் நல்ல மனமும் தான் பணம் அல்ல, என்ற உண்மையை என்று உணர்வார்களோ அன்று தான் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவுகிடைக்குமென நான் நினைக்கின்றேன்;

● வலம்புரி :-
முன்னைய காலங்களைப் போல் பெண் வீட்டிற்குள் இருப்பவளாகவும் ஆண் வெளியே சென்று தொழில் புரிபவனாகவும் இருந்த நிலைமை தற்போதுமாறிஉள்ளது. தற்கால சூழ்நிலைக்கு ஏற்ப ஒரு குடும்பத்தின் கட்டமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் இதில்ஆண் பெண் என்ற இருமுக்கிய பரிமாணங்களினதும் பங்கு எவ்வாறு அமைய வேண்டும்?

★ ச சி:-
தற்போதைய காலகட்டத்தில் ஆண், பெண் ஆகிய இருவருமே வேலைசெய்ய வேண்டிய நிலையுள்ளது. எனவே ஒரு பெண் சமூகத்தைப் பற்றி அறிந்து வைக்க வேண்டிய கட்டாயம் காணப்படுகிறது. எனவே, ஒரு பெண் சமூகத்தில் உள்ள நன்மை தீமைகளை அறிய அவளுக்கு வாய்ப்பளிக்கவேண்டியதுஅவசியமாகும், இதற்கு கணவனாகவுள்ள ஆண்கள்தடையாக இராது, சமூகத்தில் உள்ளவர்களை அவள் புரிந்து கொள்ள உறுதுணையாக இருக்க வேண்டும். அத்துடன் குடும்பத்தின் பலவேறுபட்ட வேலைகளிலும் அவளுக்கு உதவிபுரிய வேண்டியது ஆண்களின் கடமையாகும். இவ்வாறு ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழப்பழகிக் கொள்ளும்போது வாழ்க்கை இனிமையாகவே அமையும்.

● வலம்புரி :-
இறுதியாக பெண்கள் அபிவிருத்தி நிலையம் என்ற ரீதியில் எமது பிரதேச மக்களுக்கு எமது சமூகத்திற்கு குறிப்பாக என்ன கூறவிரும்புகிறீர்கள்?

★ ச.சி :-
இன்று எமது நாட்டில் பெண்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப் படுவது ஒரு முக்கியமான பிரச்சினை ஆகும். இதற்கு எமது சமூகமும், மற்றும் பாதுகாப்பிற்காக இங்கு வந்துள்ளவர்களும் முக்கிய காரணமாகும், இதனை இல்லாமல் ஒழிப்பதில் பெண்களுக்கும் மட்டுமல்ல, இந்த சமூகத்திற்கும் நிச்சயமாகத்தேவையுள்ளது. சில பெண்கள் காவல் அரண்களை தாண்டிச் செல்லும் போது இராணுவத்தினரு டன் தேவையற்ற விதத்தில் பேசிக் கொண்டிருக்கின்ற அந்த நிலை தான் ஏனைய பெண்களுக்கும் பிரச்சினை ஏற்படக்காரணமாகஉள்ளது, இவ்வாறானவர்களை சமூகத்தில் உள்ள சாதாரணமானவர்கள் சுட்டிக்காட்டி ஏற்படும் விளைவுகளை அவர்களுக்கு வலியுறுத்த வேண்டும். அந்த ஒரு சிலரால் முழுப்பெண்களுமே இன்னல் அடைவது மனவருத்தமடையக்கூடிய ஒன்றாகும். அதே வேளை சகோதரிகளைப் போல் பழகவேண்டிய எமது பிரதேசத்தில் உள்ள சில ஆண்கள் கூட இத்தகைய இன்னல்களுக்கு காரணமாக அமைகிறார்கள். இதுமிகவும் மனவருந்தக்கூடியஒன்றாகும். நான்சொல்வதாலோ, நீங்கள் எழுதுவதாலோ எதுவுமநடக்கப் போவதில்லை. அவரவர் தான் உணர்ந்து செயற்பட வேண்டும். அதுதான் என் கருத்து.

## ஆன்மீக கருத்தரங்கு

(மந்திகை)

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய முன்றலில் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை ஆன்மீக கருத்தரங்கு நடைபெறவுள்ளது

ஆலயகுரு ஸ்ரீ தெய்வேந்திர குருக்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம செயலாளர் சுவாமி சிதருபானந்தா ''செயல் மாண்டு அடங்க'' என்ற பொருளில் ஆன்மீகஉரை நிகழ்த்துவார். (க-23)

## சிரமதானம்

(ஊர்காவற்றுறை)

சுருவில் கிராம சமுர்த்திச் செயலணி உறுப்பினர்களினால் அண்மையில் சுருவில் வீதியில் சிரமதான பணி மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இச் சிரமதான நிகழ்வில் பெருந் தொகையான மக்கள் கலந்து கொண்டனர்

சுருவில் கிராம அபிவிருத்தி கருதி ஒவ்வொரு மாதமும் சிரமதானம் மூலம் பொது வேலைத் திட்டம மேற்கொள்ளப் படவுள்ளதாகத்தெரிவிக்கப் படுகிறது. (உ-75]

## விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(மந்திகை)

மிருசுவில் ஓட்டு வெளிப் பகுதியில பயிலுநர் சிப்பாய் ஒருவர் தன்னினச் சேர்க்கைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்ட இருவரும் சாவகச்சேரி நீதிமன்றில புதனன்று 'ஆஜர்' செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை எதிர் வரும் யூன் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி அன்னலிங்கம் பிறேம் சங்கர் உத்தரவிட்டார் (உ-23)

## ஒரு இலட்சம் பாவனையாளர் பயன்பாடு

[கொழும்பு]

சண்டே நிறுவனம் இலங்கையில் ஆரம்பித்த இணைய சேவை மூலம் ஒரு லட்சம் பாவனையாளர்கள் பயனடைகிறார்கள். அடுத்த ஆண்டில் இதன் எண்ணிக்கை இரு மடங்காகும்.

இவ்வாறு தொலைத்தொடர்புச் சேவை வழங்கும் சண்டே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஈகலேர் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இந் நிறுவனம் நவீனத்துவ தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி உலக தரத்திலான இணையச் சேவையை வழங்கும் என்றும் கூறியுள்ளார். [உ-6]

## விசேட கூட்டம்

[மந்திகை]

சாவகச்சேரி ஸ்ரீ பழனி ஆண்டவர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின விசேட கூட்டம எதிர் வரும் யூன் மாதம் 2 ஆம திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கரவெட்டி திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (செ-23)

## இருவர் விடுதலை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜெயசந்திர குமார், சிவானந்தம் ஆகிய இருவரையும் கொழும்பு நீதிவான் ஹேமதொடுவ விடுதலை செய்துள்ளார். (வ)

# ஜனாதிபதி அமைச்சர் ஹக்கீம் வலுவான வாய்த் தர்க்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்குமிடையில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

உள்ளூராட்சி திருத்த சட்ட மூலத்திற்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து தன்னிச்சையாக விலகி விடுவ தென்றமுஸ்லிம் காங்கிரஸின் தீர்மானத்தையடுத்தே இவ் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது.

அமைச்சர் ஒருவரை அரசிலிருந்து பிரிந்து செல்வதற்கு விடுதலைப் புலிகள் பெருந் தொகையான பணத்தை வழங்கியுள்ளதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக ஜனாதிபதி கூறிய போது, அதிருப்தி அடைந்த ஹக்கீம் அரசிலிருந்து விலக வேண்டி வருமென எச்சரிக்கை செய்தார்.

இச்சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட ஜனாதிபதி சும்மா கிடந்த தொப்பியை ஹக்கீம் தூக்கிப் போடத் தேவையில்லை எனக் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ந)

# ஆசிரியர் கலாசாலைக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சியைத் தொடர முடியாமல் இடை நிறுத்தியவர்களுக்கும். புதிதாக கலாசாலைப் பயிற்சிக்கு செல்ல விரும்பும் நிரந்தர ஆசிரியர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

வடபகுதியைச்சேர்ந்தநிரந்தர ஆசிரியர்கள்பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

தொலைக் கல்வி பயிற்சி நெறியை தொடராது பாதிக்கப்பட்டோர் விண்ணப்பிக்கும் போது தொலைக் கல்வி தடைப்பட்டமைக்கான கடிதத்தையும் தொலைக் கல்விக்குப் பொறுப்பானவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தையும் இணைக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர்.

(து)

# கைதடிப் பகுதியில் தபால் சேவைகள் ஆரம்பம்

(தென்மராட்சி)

கைதடி தபாலகம் தற்போது மீண்டும் கைதடியில் இயங்க ஆரம்பித்துள்ளது. கோப்பாய் கைதடி வீதியிலுள்ள சிவில் காரியாலயத்திற்குமுன்னால்உள்ள கட்டிடம் ஒன்றிலேயே இத்தபாலகம் செயற்பட்டு வருகின்றது.

கைதடி மக்கள் மீளக்குடியமர்ந்துவரும் இவ் வேளையில், தபாலகம் இயங்க ஆரம்பித்ததையடுத்து தபால் சேவைகள் ஒழுங்காக இடம் பெற்று வருகிறது.

இதேவேளை, இத்தபாலகம் முன்பு இயங்கிய கட்டடம் பலத்த சேதத்திற்குள்ளாகி இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-77)

# அபிவிருத்தித் தொண்டர் பயிற்சிநெறி இன்று

(வடமராட்சி கிழக்கு)

அபிவிருத்தித் தொண்டர்களுக்கான பயிற்சிநெறிகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பருத்தித்துறை நகர சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடமராட்சி கிழக்கு நடுகுடத்தனைப் பகுதியிலும் மணற்காடு விளாங்காட்டுப் பகுதியிலும் இப் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

பனை வேலை தொடர்பான பயிற்சிநெறி பருத்தித்துறை சிங்கநகர் பயிற்சியாளருடன் இணைந்து நடத்தப் படவுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளன. (க-43)

# பருத்தித்துறை- மணற்காடு பஸ் சேவையை நீடிக்கவும்

(செம்பியன்பற்று)

பருத்தித்துறையிலிருந்து மணற்காடு வரை பேருந்து சேவையை நீடிக்குமாறு அப்பிரதேச மக்கள் பருத்தித்துறை நகர சபைத் தலைவர் ஐ.பாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரனிடம் கோரியுள்ளனர்.

இப் பகுதி மக்கள் போக்குவரத்துச் செய்வதில் எதிர்நோக்குகின்ற இடர்கள் குறித்தும் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றே பயணம் செய்ய வேண்டியுள்ளதாகவும் அக் கோரிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-42)

# காணாமல போனோர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் உயர் நீதிமன்றில் தாக்கல்

## மனித கௌவரத்திற்கான மன்றம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

1996, 1997 காலப்பகுதியில் கைதாகி காணாமற்போனவர்களுக்கான ஆட்கொணர்வு மனுவழக்குகள் யாழ் உயர் நீதிமன்றத்தில் நடத்துவதற்காகத்தாக்கல் செய்து மனிதகௌரவத்திற்கானமன்றத்தால்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முதற்கட்டமாக 5 நபர்களுக்கான வழக்குகள் மன்றத்தின் சட்டத்தரணி ஆர் ஜெயசிங்கத்தினால் தாக்கல் செயற்ப்பட்டுள்ளது.

காணாமற் போன அனைவருக்கும் இம் மன்றத்தால் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளதால் வழக்குத் தாக்கல் செய்யாதவர்கள் மணியம் கட்டடத்தில இம் மன்றத்தில் இயங்கும் மனித கௌரவத்திற்கான மன்றத்துடன் தொடர்பு கொளளுமாறு அதன் இணைப்பாளர் ஐ சிவராசா கேட்டுக் கொள்கிறார்.

இம் மன்றத்தால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் யாவும் இலவசமாக நடாத்தப்படவுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# எட்டுப் பெண்களை திருமணம் புரிந்தவருக்கு 04 வருட சிறைவாசம்

(கொழும்பு)

உயர் பதவிகளில் உள்ள எட்டுப் பெண்களை திருமணம் புரிந்து பெருமளவு பணத்தைச் சுருட்டிக் கொண்ட நபர் ஒருவருக்கு அத்தனகல நீதிவான் நான்கு வருட கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

பிரஸ்தாப நபர் அத்தனகல பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜராக்கப்பட்ட போது தெரிவிக்கையில்; முதலில் கம்பஹாவில் பெண்பொலிஸ் பரிசோதகர் ஒருவரை திருமணம் செய்ததாகவும், மற்றைய எழுவரில் பிரதேச செயலர் ஒருவரும் அடங்குவர் என்றார். (க-05)

# செய்தித் துளிகள்

## இராஜகோபுரம் அமைப்பு

(திருநெல்வேலி)

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள ஆலயத்துக்கு பொதுமக்களின் ஆதரவுடன் பல லட்சரூபாசெலவில் புதிதாக இராஜகோபுரம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் ஆலய அறங்காவல் குழு தலைமையில் கடந்த வியாழக் கிழமை நடை பெற்றது. [உ]

## பால பண்டித வகுப்புக்கள் வழமை போல்

[யாழ்ப்பாணம்]

ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற பாலபண்டித வகுப்புக்கள் வழமை போல சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.30 தொடக்கம் பிற்பகல்2.30மணிவரை நடைபெறும் என ஆரியதிராவிடாபஷாபி விருத்திச் சங்கசெயலாளர்ந. கடம்பேசுவரன் அறிவித்துள்ளார்: [உ-9]

## அடையாள அணிவகுப்பு

(மன்னார்)

மன்னாரில் கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி குடும்பப் பெண்கள் இருவர் பாலியல் வல்லுறவுக்கு, உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக, சந்தேக நபர்களை அடையாளம் காட்டும் நான்காவது அடையாள அணிவகுப்பு மன்னார் மாவட்ட நீதிமன்றில் நடைபெற்றது: (இ)

## விபத்து

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மோதியதால் கை,கால் பகுதிகளில் காயமடைந்த சிறுவன், சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

யாழ் கஸ்தூரியார் வீதியில் நடைபெற்ற இவ் விபத்தில் உடுவில் கிழக்கைச் சேர்ந்த சத்திய மூர்த்தி தயூரன் (வயது 3) என்ற சிறுவனே காயமடைந்தவனாவான்.

(உ-2)

## ஆலயத்தில் சேதமில்லை

(மந்திகை)

சாவகச்சேரிவித்தகம் சாரத சுவாமி கோவில்எந்தவிதசேதமுமின்றி காணப்படுவதாக நேற்று முன்தினம் அப்பகுதிக்குச் சென்று திரும்பிய பரமசாமி குரு தெரிவித்துள்ளார்

எந்தவித சேதமுமின்றிக் காணப்பட்டதுடன் அனைத்துப் பொருட்களும் வைக்கப்பட்ட இடத்திலேயே காணப்பட்டதாக அவர் ஆச்சரியப்பட்டார்.

அதேவேளை ஆலயத்தைச் சுற்றிக்காணப்பட்டகட்டடங்கள் சேதமடைந்திருந்ததுடன் பொருட்கள் திருடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதிகளுக்கான வெட்டுப்புள்ளிகளால்பாதிக்கப்பட்ட, கலை, வர்த்தக, உயிரியல், கணிதப் பிரிவு மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 30 மணிக்கு கன்னாதிட்டியில் உள்ள நியூ சயன்ஸ் ஹோல் கல்வி நிலையத்தில்நடைபெறவுள்ளது: (க-9)

## வெளி வீதி திறப்பு

(வட்டுக்கோட்டை)

வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயத்திற் கென புதிதாக அமைக்கப்பட்டுள்ள வெளிவீதி கடந்த புதன்கிழமை பி ப 4 30 மணியளவில் ஈ.பி.டி.பி யின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கே,வி. குகேந்திரனால் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. (உ-24)

## அமைச்சரிடம் கோரிக்கை

(தென்மராட்சி)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையிலுள்ள பொது நிலத்தை பாடசாலை விளையாட்டு மைதானமாகப் பாவிப்பதற்கு அதனைச் சுவீகரித்துத் தரும்படி வித்தியாலய கல்விச்சமூகம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், மற்றும் பழைய மாணவர் சங்கம் ஆகியன இணைந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளன. (உ-77)

## தெய்வீகப் பேருரை

(மந்திகை)

நெல்லியடி தடங்கன் புளியடி முருக மூர்த்தி ஆலய மஹோற்சவகால தெய்வீக பேருரை எதிர் வரும் 7 ஆம் திகதி வரை தினமும் 4.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

''முருகன் பெருமை'' என்ற பொருளில் கலாவினோதன் க நா. கணபதிப் பிள்ளை (சின்னமணி) சொற்பொழிவு நிகழ்த்துவார்.

## விண்ணப்பம் கோரல்

(கல்வயல்)

கொழும்பு பல்கலைக்கழக பட்டப் பின்கல்வி நிறுவனத்தால் மருத்துவத்தில் பட்டப் பின்படிப்புக் கல்வி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இலங்கை மருத்துவச் சங்கத்தில் பதிவு செய்துள்ள எம். பி. பி. எஸ் பட்ட தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படும். இதற்கான விண்ணப்ப முடிவு அடுத்த மாதம் 8 ஆம் திகதியாகும் (உ-111)

## பாலம் திருத்தம் இல்லை

(ஈச்சமோட்டை)

வட்டுக்கோட்டை மாவடிச் சந்தியிலிருந்து மூளாய் நோக்கிச்செல்லும் வீதியில் முதலாவதாக அமைந்துள்ள பாலம் நீண்டகாலமாக கவனிப்பாரற்றுக்காணப்படுகின்றது. இப்பாலத்தினூடாக நீர் வடிந்து செல்ல முடியாது இருப்பதால் மழை காலங்களில் வீதி ஓரமாக நீர் தேங்குவதுடன் நுளம்புத் தொல்லையும் அதிகரித்து வருகின்றது.

(உ-59

## அரவம் தீண்டியது

(மந்திகை)

வெங்காயம் பொதி செய்து கொண்டிருந்த வேளை அதனுள்ளிருந்த பாம்பு தீண்டியதில் தொழிலாளி ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புலோலி வத்தளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வசந்தரூபன் (வயது 25) என்பவரே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்: (உ-23)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ வாகனம் மோதியதால் காயமடைந்த நிலையில் முதியவர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழனன்று புன்னாலைக் கட்டுவன் வீதியில் இடம் பெற்ற இவ் விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஒத்தர் பசுபதி (வயது 58) என்பவரே காயமடைந்தவராவார். (உ-10)

## பற்சிகிச்சை நிலையம்

(ஊர்காவற்றுறை)

வேலணை அரசினர் வைத்திய சாலையில் பற்சிகிச்சை நிலையத்திற்கென புதிய கட்டிடம் ஒன்று அமைக்கப் பட்டு வருகின்றது.

பாடசாலை மாணவர்களுக்கு பற்சிகிச்சையினை அளிப்பதற்காகவே இப் பற்சிகிச்சை நிலையம் அமைக்கப் பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

(உ-75)

## காணி கொள்வனவு

(துன்னாலை)

பருத்தித்துறை பிரதேச செயலகம் அமைப்பதற்கான காணி, தற்காலிகமாக செயலகம் இயங்கும் இடத்திற்கு அண்மையில் நலன் விரும்பிகளால் கொள்வனவு செய்யப் பட்டுள்ளது. (உ-41)

## இன்று ஒரு தகவல்

# பொறுமையின் பெருமை

இன்றைய அவசர உலகிலே இயந்திர வேகத்தில் மனிதன் இயங்கிக் கொண்டிருக்கின்றான். இந்த இயந்திர உலகிலே மனிதன் இழக்கக்கூடாதது எது தெரியுமா?

என்னவென்று சிந்திக்கிறீர்களா? ஆம்! உங்கள் பொறுமையைச் சோதிக்க விரும்பவில்லை அதுதான்பொறுமை.

'பொறுத்தார் பூமி ஆழ்வார்; பொங்கினார் காடாள்வார்'

என்றொரு பழமொழி உண்டு. பொறுமையானது அத்துணை பெருமைவாய்ந்தது. இந்த பூமியை அரசாட்சி செய்யும்அளவுக்கு பொறுமை ஒருவரை உயர்த்தவல்லது.

ஆனால், பொறுமையை இழந்து விட்டால் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் மிகவும் கொடுமையானது.

உதாரணமாக பொறுமை இழப்பு பால் பொங்கிநிலத்தில் சிந்தி பயனற்றுப் போவதற்கு சமனாகும்.

'வில்லுக்கு விஜயன், மல்லுக்கு வீமன், பொறுமைக்கு தருமர்' என்பார்கள். தர்மமகாராஜாவிற்கு எத்தனையோசோதனைகள் ஏற்பட்டன. நாடிழந்து, நகரிழந்து, கட்டிய மனைவியையும் இழந்து, இறுதியில் திரௌபதி மானபங்கப்படுத்தப்பட்ட நிலையிலும் மனம் தடுமாறாது, தன் நிலை தளம்பாது பொறுமையாக இருந்தவர் தர்மராஜா. தர்மராஜா பொறுமையாக இருந்ததால் தான் மகாபாரத யுத்தத்தில் வெற்றி வாகை சூடினார்.

'பொறுமை என்னும் நகையணிந்து பெருமை கொள்ள வேண்டும் பெண்கள்' என்றொரு பாடலடி விலை மதிப்பற்ற பொறுமையை எடுத்தியம்பி நிற்கின்றது. பொறுமைஎன்னும்மிகச் சிறந்த, விலை மதிப்பற்ற அணி கலன்களை அணிந்து கொண்டால் வேறு நகை தேவையில்லை. அழகு தருவதற்கு அது ஒன்றே போதும். பொறுமை என்ற நகையை பெண்கள் மாத்திரம்அணிந்து பெருமைபெற்றால்போதாது. அந்த நகையை ஆண்களும் அணிந்து அழகு பெற வேண்டும் அதுவே சிறப்பு.

'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை' என்ற திருக்குறள் அடிப்பூமா தேவியின் பொறுமையை அழகாகக் கூறுகின்றது. நாம்பூமா தேவிக்கு எத்தனையோ தொல்லைகள் கொடுத்த போதும் அத்தனைதொல்லைகளையும் பொறுத்து எம்மைத் தாங்குகிறாள் இன்னா செய்தவர்க்குநன்மையே செய்யும் அப்பொறுமையேஅதன் பெருமை.

இன்றைய சமூகத்தில் மேலோங்கி நிற்கும்அடாவடிகள் குறைந்து எதிர் கால சமூகம் பண்புள்ள சமூகமாக உருவாக வேண்டுமாயின், பொறுமைஎன்னும்அணிகலம் அணிவது இன்றியமையாததொன்றாகும்.

சமூகத்தில் துடியாட்டம் உள்ளவர்களாக இளம்சமுதாயத்தினரே காணப்படுகிறார்கள். இன்று சமூகத்தை சீர்கெடுப்பதும் அவர்களே. எனவே,

'பெரிது பெரிது பொறுமை பெரிது அதனினும் பெரிது இளமையிற் பொறுமை'

துடியாட்டம் கூடிய இளம்பருவத்தினர் பொறுமையைக் கடைப்பிடிப்பதும் ஒருசாதனையே,

வரணியூர்: சி. நந்தா

## 1983 இனக்கலவரத்தின் உண்மைக் காரணத்தை கண்டறிய

# தெரிவுக்குழு அமைக்கக் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு விரோதமான முறையில் 1983ம் ஆண்டு யூலை மாதம் ஏற்பட்ட இனக்கலவரத்திற்கான உண்மைக் காரணங்களை ஆராயவென பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு இனவிவகார தேசிய ஒருங்கிணைப்பு பிரதியமைச்சர் கே. எஸ். கணேசமூர்த்தி பாராளுமன்ற சபாநாயகரிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இக்காலப் பகுதியில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரச் செயல்கள் தொடர்பாக ஆராய ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமும் ஆணைக்குழுவை நியமிக்காது பாராமுகமாக செயற்பட்டுள்ளது என்று பிரதியமைச்சர் அக்கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (உ-5)

## மலசலகூடம் அமைப்பு

(துன்னாலை)

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் வல்வெட்டித்துறை பொலிகண்டி, திக்கம், சக்கோட்டை, வியாபாரி மூலை ஆகிய இடங்களில் பொது மக்கள் பாவனைக்கு மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன (உ-41)

## படை வீரர் பலி

(யாழ்ப்பாணம்)

முகமாலைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் பொறி வெடியில் சிக்கி படைவீரர் ஒருவர் பலியானதுடன், இரு படையினர் காயமடைந்துள்ளதாக ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (உ-5)

## 7ம் திகதி வரை விளக்கமறியல்

(கொழும்பு)

மாவனல்லையில் இடம் பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து கொழும்பில் கைது செய்யப்பட்ட 24 முஸ்லிம்களையும் அடுத்த மாதம் 7ஆம் திகதி வரை தடுத்து வைக்குமாறு கொழும்பு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட 24 முஸ்லிம்களுக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பொலிசார் தெரிவித்ததை அடுத்தே இவர்கள் அனைவரும் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ம)

## பாடசாலைக் காணிகள் கல்விப் பணிப்பாளர்களின் நேரடிக் கண்காணிப்பில்

(மானிப்பாய்)

வடக்கு- கிழக்குப் பகுதிகளிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளின் காணிகள் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் நேரடிப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று வடக்கு- கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது

பாடசாலைக் காணிகளை பிரதேச செயலருடாக நில அளவீட்டுத் திணைக்களத்தின் உதவியுடன் அளவீடு செய்து எல்லைகள் குறிக்கப்படுவதுடன், பாடசாலைக்குச் சொந்தமான காணிகளை உறுதிப்படுத்தி தொடரும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது

இது சம்பந்தமான சுற்று நிருபமொன்று கல்விவலயப் பணிப்பாளர்கள், அரசாங்க அதிபர், பிரதேச செயலர்கள் காணி ஆணையாளர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது (உ-120)

## நெடுந்தீவு பாடசாலையில் க. பொ. த. உயர்தர வகுப்பு ஆரம்பம்

(நெடுந்தீவு)

யா/நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் க. பொ. த. (உ/த) வகுப்பு கடந்த 23 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நெடுந்தீவு அரசியற் பொறுப்பாளர் கே. மோகன் இந் நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இப் பகுதி மாணவர்களின் உயர் கல்விக்கு இதுவரை காலமும் இருந்துவந்த இடைஞ்சல்களை நீக்கு முகமாக பாடசாலையின் புதிய அதிபர் எஸ் சத்தியவரதனும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் எடுத்த அதீத முயற்சியினால் அண்மையில், மக்கள் குறை நிவர்த்தி சேவையில் இதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

## நெடுங்குளத்தில் வெடிப் பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

வவுனியா நெடுங்குளப் பகுதியில் பெருமளவு ஆயுத உபகரணங்கள் துப்பறியும் பொலிஸ் பிரிவினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

ஆயிரத்து 500 துப்பாக்கி ரவைகள், கண்ணி வெடிகள் 43 மகசீன் துப்பாக்கிகள் போன்றவையும் அதிக சக்தி வாய்ந்த இரண்டரைக் கிலோ நிறையுடைய வெடி குண்டு என்பன இவற்றில் அடங்கும்.

இவ் ஆயுதங்களை வைத்திருந்தனா என்ற சந்தேகத்தின பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள தொடர்பான தீவிரவிசாரணைகளை துப்பறியும் பொலிஸார் நடத்திருவகின்றனர். (உ-7)

## உயர்கல்வி வாய்ப்பிற்கு அமைச்சர் உத்தரவாதம்

(யாழ்ப்பாணம்)

கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர் அடங்கிய குழுவினர் அண்மையில் தமது உயர் கல்வி வாய்ப்புக்கள் தொடர்பாக அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் போது, இவர்களது உயர் கல்வி வாய்ப்புக்கள் தொடர்பாக, விரிவாக ஆராயப்பட்டதுடன் இது விடயத்தில் டிப்ளோமா ஆசிரியர்களுக்கு, கூடிய விரைவில் உயர் கல்வி வாய்ப்பு பெறுவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். (உ)

## நகர சபைக்குச் சொந்தமான கட்டடங்களை விரைவில் புனரமைக்கக்கோரிக்கை

### சாவகச்சேரி வணிகர் கழகம் வேண்டுகோள்

(மந்திகை)

சாவகச்சேரி பகுயில்அமைந்துள்ள நகரசபைக்குத்சொந்தமான கட்டடங்களை மிக விரைவில் புனரமைத்து தருமாறு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் சாவகச்சேரி நகர சபைக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுட்பியுள்ளனர்.

அக்கடிதத்தில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சாவகச் சேரிபிரதேசத்தை அண்டிய பகுதிகளில் மீளக் குடியமர்வு நடவடிக்கைஆரம்பிக்கப் பட்டுள்ளதையடுத்து அப்பகுதி வர்த்தக நிலயங்களைதிறந்து இரண்டு மாதத்திற்குள் வர்த்தக நடவடிக்கைளை ஆரம்பிக்குமாறு கோரியிருந்தனர்;

ஆதலால் எமது பெரும்பாலான வணிகர்கள் தங்களுக்குச்சொந்தமான நவீன சந்தை மற்றும் ஏனைய பகுதிகளில் வணிகத்தை ஆரம்பிக்கவுள்ளதால் வர்த்தக நிலைய கட்டடங்கள் மிகவிலரவில் புனரமைத்து தரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-23)

## சிரமதானப் பணிகள்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தித் தொண்டர்களால் கடந்த செவ்வாய்க்கிழமை பல சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. (உ-42)

## வீதி புனரமைப்பு

(திருநெல்வேலி)

திருநெல்வேலி தாளையடி வீதி புனரமைப்புச் செய்ய பட்டு வருகிறது. (உ)

## அவசர வேண்டுகோள்

(வடமராட்சி கிழக்கு)

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜன் ஞாபகார்த்தமாக விளையாட்டுப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை ஈ ஆர். ஏ. நிறுவன ஆதரவுடன் யாழ்ப்பாண ஊடகவியலாளர்சங்கம் மேற்படி போட்டிகளை பருத்தித்துறைப் பகுதியில்நடாத்தவுள்ளது.

இதன் முதற் கட்டமாக உதை பந்தாட்ட சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் அந்தப்பகுதி பிரதேச செயலரின் உறுதிப் படுத்திய கடிதத்துடன், ஈ. ஆர். ஏ. ஒடியோ அனட் வீடியோ, பிரதான வீதி, பருத்தித்துறை என்ற முகவரிக்கு எதிர் வரும் 10ம் திகதிக்கு முன்னர் தமதுவிண்ணப்பங்களை அனுப்புமாறு யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் கேட்டுள்ளது. (க-43)

## தனிச் சிங்களத்தில் வந்த அழைப்பிதழ் கடிதங்கள்

(பருத்துறை)

மின்சார சபைகளில் கடமையாற்றும் ஊழியர்களின்சேவைகளைப்பாராட்டி கௌரவிக்கும நிகழ்வுக்காக, யாழ்ப்பாணம் அனுப்பப்பட்ட அழைப்பிதழ்கள தனிச் சிங்களததிலேயே காணப்படுகின்றன

நீண்டகாலமாக மின்சார சபைகளில் கடமை புரியும் ஊழியர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்தமண்டபத்தில் நீரியல் மின் சக்தித்துறை அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்காக யாழ் குடாநாட்டில கடமையாற்றும் மின்சார சபை ஊழியர்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பிதழ் தனிச் சிங்கள மொழியில அமைந்துள்ளது. (உ-23)

## இரு புதிய பஸ்வண்டிகள் பருத்தித்துறை சாலைக்கு

(வட மராட்சி கிழக்கு)

பருத்தித்துறை பேருந்து சாலைக்கு இரு புதிய பஸ்கள தருவிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டதையடுத்து புதிய இரு பஸ்கள் பருத்தித்துறை சாலைக்கென வழங்கப்பட்டுள்ளன.

ஒரு பஸ் சிறிய ரக சிரகத்தை சேர்ந்தது இது வடமராட்சிகிழக்கு மணற்காடு குடத்தனை பகுதிகளுக்கு குறுந்தூர சேவையிலும் மற்றையது பருத்தித்துறை-யாழ்ப்பாண சேவையில ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பருத்தித்துறைப் போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-43)

# சீனாவில் பூமியதிர்வு இருவர் 'பலியாகினர்

(பீஜிங்)

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில்இரண்டுபேர் கொல்லப்பட்டனர் அறுநூறு பேர் காயமடைந்துள்ளனர்.

மலைப்பாங்கான பிரதேசத்தில் ஏற்பட்ட இப்பூமியதிர்ச்சியில் பல கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

5 8 றிச்டர் அளவு பூமி அதிர்வு பதியப்பட்டுள்ளது.

பூமியதிர்ச்சியால் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் பாதிக்கப்பட்டனவென்றும் நாற்பது பாடசாலைகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் நடந்த இந்த அதிர்வினால் முப்பத்தாறு மில்லியன் டொலர் பெறுமதியான சேதமேற்பட்டுள்ளது. (து)

# கச்சதீவை மீட்க வேண்டும் ஆளுநர் உரையில் பாத்திமாபீபீ

(சென்னை)

கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்க வேண்டும் என்று நேற்று முன் தினம் தமிழக அரசின்ஆளுநர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலுள்ளதும் முன்பு இந்தியா வசமிருந்ததுமான கச்சதீவை மீளப் பெற்று தமிழக மீனவர்கள் மீன் பிடிக்க வழி செய்யுமாறு இந்திய அரசை மாநில அரசு வலியுறுத்தும் என்றும் குறிப்பிட்டார். (து)

# அமெரிக்க நீதிபதிகளுடன் ஐ. நா. பொதுச்செயலர்

(வாஷிங்டன்)

ஐக்கியநாடுகள் சபைப் பொதுச்செயலர் கோபி அனான் அமெரிக்கா சுப்ரீம் கோர்ட் நீதிபதி களுடன் விருந்துஒன்றில் கலந்துகொள்ளத்தீர்மானித்துள்ளார்.

வாஷிங்டனுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள அனான் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துபேச்சு நடத்தவுள்ளார்.

ஐ. நா. பொதுசெயலாளர் ஒருவர் சுப்ரீம்கோர்ட் நீதிபதிகளுடன் விருந்தில் கலந்துகொள்வது அமெரிக்க வரலாறில் முதல் முறைஇதுவேயாகும். (க-7)

# வாஜ்பாயின் அழைப்பை ஏற்று பாகிஸ்தான் அதிபர் இந்தியா விஜயம்

(புதுடில்லி)

எதிர்வரும் யூலைமாதத்தில் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் இந்தியா வர விருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் புதுடில்லிக்கு பேச்சுவார்த்தைக்கு வரும்படி பாகிஸ்தான் அதிபருக்கு விடுத்த இழைப்பையடுத்தே இவரது இந்திய விஜயம் அமைய உள்ளது.

இதற்கிடையில் பிரதமர் வாஜ்பாயின் அழைட்பை பூரணமாக ஆராய்வதாகவும் ஒருவாரத்துள் முறைப்படிகடிதம் அனுப்பவிருப்பதாக பாகிஸ்தான் வெளியுறவு செய்திகள் தெரிவிக்கின்றன.

வேறு மார்க்கம் இல்லாத காரணத்தால் தான் பாகிஸ்தான் அதிபருக்கு அழைப்பு விடுத்ததாக வாஜ்பாய் தெரிவித்தார். (து

# பாடசாலைக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 30 பேர் கோரப்பலி

[விஜயவாடா]

கட்டுவேலைநடந்துகொண்டிருந்த கல்லூரிக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் முப்பது பேர் கொல்லப்பட்டனர்.

ஆந்திர மாநிலத்தில் கம்மா மாவட்டத்திலுள்ள கிராமமொன்றில் இது நிகழ்ந்தது.

ஐம்பதுக்குமேற்பட்டோர் இந்த இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

மீட்புப் பணிகளில் காவல் துறையினர் ஈடுபட்டுள்ளனர். காயமடைந்தவர்களை உடனடியாக மருத்துவ மனைக்கு கொண்டு வரும்பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. (து)

# மீண்டும்கிரிக்கெட் ரெஸ்ட் போட்டியில் இந்தியாவும் பாகிஸ்தானும் மோதும்

உலக தரிசனம்

(கராச்சி)

பன்னிரெண்டுஆண்டுகளின் பின் இந்தியாவும் பாகிஸ்தானும் கிரிக்கெட்ரெஸ்ட் போட்டிகளில் மோதுகின்றன.

செப்டெம்பர் மாதம் 13ம் திகதி தொடக்கம் 7தி திஆம் வரை ஆசியகிரிக்கெட்ரெஸ்ட் சம்பியன் போட்டியில் கலந்து கொள்வதற்குரிய இணக்கத்துக்கு வந்துள்ளன.

இந்திய கிரிக்கெட்கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் ஏ. சி முத்தையாவைபாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் தௌசிசிறியா சந்தித்ததையடுத்து கராச்சியில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

1989 ஆம் ஆண்டு இருநாடுகளும் விளையாடியதன் பின் வரும் செப்டெம்பரில் முதல் முறையாக விளையாட இருக்கின்றன. இதனைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு பாகிஸ்தானில் நடைபெறும் ஆசியக் கோப்பைப் போட்டியிலும் விளையாட இருக்கின்றன (து)

# இஸ்ரேல்-பலஸ்தீனம் மோதலை தீர்க்க சர்வதேச அழுத்தம்

(ஜெருசலேம்)

இஸ்ரேல - பலஸ்தீனம் ஆகிய இருநாடுகளுக்கு மிடையில கடந்த 8 மாத காலமாக இடம்பெற்று வரும் நெருக்கடிகளைத்தீர்க்கும் முகமாக இருநாடுகளிற்கு மிடையில் சர்வதேச அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

மத்திய கிழக்குக்கான விசேட தூதுவர், இஸ்ரேலின் பிரதமர் ஏரியல் ஷரோனிடம் பலஸ்தீனிய ஜனாதிபதி ஜாஸிர் அரபாத்துடனும் இது பற்றி தனித்தனியே பேச்சு நடத்தியுள்ளார் எனவும் 'தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இஸ்ரேல் யுரேனியம், மற்றும் விஷவாயு கொண்ட ஆயுதங்களைப் பயன்படுத்துவதால் ஏனைய முஸ்லிம் நாடுகளில் இருந்துதனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று பலஸ்தீன ஜனாதிபதி அரபாத் கோரிக்கை விடுத்துள்ளார். (க-7)

# பயண அனுமதிவழங்கப்பட்டோர்விபரம்

மே மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 153308 ஏ | 153308 பி |
| 173191 ஏ | 173191 பி |
| 186835 ஏ | 186835 பி |
| 188719 ஏ | 189585 ஏ |
| 190531 ஏ | 190725 ஏ |
| 191803 ஏ | 191822 ஏ |
| 191822 பி | 191822 சி |
| 191896 ஏ | 191896 பி |
| 191896 சி | 191896 டி |
| 191925 ஏ | 191951 ஏ |
| 191951 பி | 192202 ஏ |
| 192202 பி | 192203 ஏ |
| 192407 ஏ | 192407 பி |
| 192407 சி | 192427 ஏ |
| 192461 ஏ | 192461 பி |
| 193512 ஏ | 193526 ஏ |
| 193566 ஏ | 193572 ஏ |
| 193588 ஏ | 193628 ஏ |
| 193628 பி | 193528 சி |
| 193666 ஏ | 193666 பி |
| 193666 சி | 193707 ஏ |
| 193707 பி | 193751 ஏ |
| 193751 பி | 193751 சி |
| 193751 டி | 193753 ஏ |
| 193752 பி | 193752 சி |
| 193763 ஏ | 194199 ஏ |
| 194243 ஏ | 194243 பி |
| 194347 ஏ | 194347 பி |
| 194348 ஏ | 194348 பி |
| 194349 ஏ | 194380 ஏ |
| 194380 பி | 194380 சி |
| 194413 ஏ | 194413 பி |
| 194457 எ | 194457 பி |
| 194458 ஏ | 194855 ஏ |
| 194879 ஏ | 194926 ஏ |
| 194962 ஏ | 194962 பி |
| 194962 சி | 195009 ஏ |
| 195054 ஏ | 195099 ஏ |
| 195099 பி | 195131 ஏ |
| 195888 ஏ | 195888 பி |
| 196888 சி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 189341 ஏ | 189515 ஏ |
| 189515 பி | 189 66 ஏ |
| 189566 பி | 191928 ஏ |
| 198206 ஏ | 198206 பி |
| 192390 ஏ | 192412 ஏ |
| 192418 பி | 192487 சி |
| 192487 பி | 192488 ஏ |
| 193540 ஏ | 193601 ஏ |
| 193601 பி | 193602 ஏ |
| 193608 ஏ | 193702 ஏ |
| 193702 பி | 193769 ஏ |
| 193769 பி | 193769 சி |
| 194231 ஏ | 194323 ஏ |
| 194323 பி | 194323 சி |
| 194339 ஏ | 194384 ஏ |
| 195023 ஏ | 195067 ஏ |
| 195067 பி | 195067 சி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 158827 ஏ | 158827 பி |
| 158827 சி | 179495 ஏ |
| 179495 பி | 184970 ஏ |
| 184970 பி | 189557 ஏ |
| 189557 பி | 189557 சி |
| 190733 பி | 192258 ஏ |
| 192258 பி | 192258 சி |
| 192258 டி | 192258 ஈ |
| 192386 ஏ | 193568 ஏ |
| 193568 பி | 193612 ஏ |
| 193650 ஏ | 193650 பி |
| 193653 ஏ | 193673 ஏ |
| 193673 பி | 193698 ஏ |
| 193698 பி | 193745 ஏ |
| 193745 பி | 193750 ஏ |
| 193767 ஏ | 193772 ஏ |
| 194268 ஏ | 194268 பி |
| 194303 ஏ | 194374 ஏ |
| 194374 பி | 194374 சி |
| 194374 டி | 194375 ஏ |
| 194383 ஏ | 194392 ஏ |
| 194402 ஏ | 194450 ஏ |
| 194478 ஏ | 194478 பி |
| 194478 சி | 194842 ஏ |
| 194963 பி | 195037 ஏ |
| 195037 பி | 195037 சி |
| 195062 ஏ | 195861 ஏ |

### தெல்லிப்பளை

| | |
|---|---|
| 190671 ஏ | 194373 ஏ |
| 194373 பி | 194383 சி |
| 194377 ஏ | 194908 ஏ |
| 194908 பி | 194963 ஏ |
| 195012 ஏ | 195012 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 178745 ஏ | 178545 ஏ |
| 178745 சி | 180369 ஏ |
| 180369 ஏ | 180369 பி |
| 183277 பி | 183278 சி |
| 183277 டி | 183277 எப் |
| 190576 ஏ | 192384 ஏ |
| 19238 பி | 192411 ஏ |
| 192411 | 193569 ஏ |
| 193569 பி | 193569 சி |
| 193569 டி | 193569 ஈ |
| 193569 எப் | 193630 ஏ |
| 193681 ஏ | 193695 ஏ |
| 193695 பி | 193695 சி |
| 193695 டி | 193715 ஏ |
| 193715 பி | 193728 ஏ |
| 194222 ஏ | 194222 பி |
| 194315 ஏ | 194316 ஏ |
| 194346 ஏ | 194346 பி |
| 194246 சி | 194350 ஏ |
| 194350 பி | 194910 ஏ |
| 194910 பி | 194944 ஏ |
| 195024 ஏ | 195111 ஏ |
| 195111 பி | 195111 சி |
| 195112 ஏ | 195863 ஏ |

# கார் விபத்திலிருந்து அமைச்சர் தப்பினார் தமிழகத்தில் சம்பவம்

[சென்னை]

தமிழகக் கல்வி அமைச்சர் சே தப்பித்துரை கார் விபத்தொன்றில் மயிரிழையில் உயிர்தப்பினார்.

தனது இல்லத்திலிருந்து அமைச்சர் தலைமை அலுவலகத்திற்குதமது காரில் சென்றுகொண்டிருக்கையில் இவ் விபத்து இடம்பெற்றது.

அதிஸ்ட வசமாக காயங்கள் எதுவுமின்றி உயிர் தப்பிய அமைச்சர் ஓட்டோ ஒன்றில் தமது அலுவலகத்திற்கு விரைந்து சென்றுதாகவும் மேலும் அறியப்படுகிறது. (க-து)

# அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து அதிபர், உப-அதிபர் வெளி நடப்பு

## இந்தோனேஷியாவில் சம்பவம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய சமரச அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து அதிபர் ரகுமான் வாஹிட்டும் உப அதிபர் மேகவதி சுகார்ண புத்திரியும் வெளியேறினர்.

ஏழு அமைச்சர்கள் குழு ஒன்று இந்தோனேஷியாவில் அதிபர்களிடையே சமரசத்தைக் கொண்டு வரக் கூட்டப்பட்ட கூட்டத்திலிருந்து இருவரும் வெளியேறினர்.

அமைச்சரவையில் அதிபரின் அதிகாரங்களைப் பகிர்தல் தொடர்பாகப் பேசப்பட்டதாகவும் அதிபரின் அதிகாரங்களை குறைத்து உப அதிபரின் அதிகாரங்களை கூட்டுதல் சம்பந்தமாகப் பேசப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் மனமுடைந்த மேகவதி கூட்டத்திலிருந்து வெளி நடப்புச் செய்தார்.

கூட்டம் தொடங்கி சிறிது நேரத்தில் அதிபர் வாஹிட்டும் வெளியேறினார்.

இதே வேளையில், இந்தோனேஷியாவில்அரசியல் நெருக்கடி அதிகரித்துள்ள நிலையில் அந்நாட்டு உப ஜனாதிபதி மேகவதி சகல்போ தலைநகரை விட்டு செல்லும் திட்டம் எதுவுமில்லையென தெரிவித்துள்ளார்.

மேகவதி கிழக்கு யாவாப் பகுதிக்குச்செல்லத் திட்டமிட்டிருந்த போதும் அவ்வாறான திட்டம் எதுவும் அவருக்கு இல்லை என்றும் அவர் தலைநகரிலே தங்கியிருப்பார் என்றும் அவரது அலுவலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (து-7)

"நியாயத்தில் தவறாது குடிகளைக்காக்கும் அரசன் தெய்வம் போன்றவன் ஆவான்"

குறள்

# வலம்புரி

## ஈழப்போரில் பகவத்கீதை !

புலிகள் மீதான தடையை நீக்கப்போவதில்லை என்ற அரசின் அறிவிப்பை அடுத்து நோர்வேயின் சமாதான முயற்சிகள் வெற்றி தரப்போவதில்லை என்பது சர்வநிச்சயம்.

தடை செய்யப்பட்ட அமைப்பு எப்படி அரசுடன் ஒரே மேசையில் இருந்து பேச முடியுமென்பது புலிகள் தரப்பு நியாயம் மறுபுறத்தில் புலிகளுடன் பேசிக் கொண்டு அவர்கள் மீதான தடையை நீக்கலாம் என்பது அரச பக்கத்து நியாயம். இந்த இரண்டு பக்க நியாயங்களும் எதற்கு ஒப்பானதெனில் திருமண எழுத்தை எழுதிவிட்டு குடும்பம் நடத்தலாமென புலிகள் கூற, இல்லை குடும்பம் நடத்திக் கொண்டு அதன் பின் எழுத்தை எழுதலாம் என அரசு கூறுவது போல் உள்ளது.

இதில் குடும்பம் நடத்திக் கொண்டு எழுத்து எழுதுவதென்பது எங்ஙனம் நியாயமாகும். புலிகளுடன் பேசுவதற்கு அரசு இதய சுத்தியுடன் விரும்பினால் - இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்ற அவா இருந்தால் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு எந்தத்தடையும் இருக்க முடியாது.

ஆனால் பேச்சுவார்த்தைக்குப் பின்னரே புலிகள் மீதான தடை நீக்கம் பற்றி ஆராய முடியுமென்ற அரசின் கருத்து தென்னிலங்கை பௌத்த பேரினவாத அமைப்புகளின் அச்சுறுத்தல்களுக்கு அரசு அடிபணிந்து விட்டதென்பதையே தெளிவு படுத்துகிறது.

எதுவாயினும், பூனைக்கும் தோழன், பாலுக்கும் காவல் என்ற இரு வேறுபட்ட நிலைகளிலிருந்து கொண்டு அரசினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. அரசாங்கம் தொடர்ந்தும் வரட்டுக்கௌரவத்தைக் கட்டிக் காக்கும்.

நிலைமை இப்படியே போனால் சஞ்சயன் தூதைத் தொடர்ந்து பாரதப் போர் மூண்டது போல், எரிக் சோலின் தூதைத்தொடர்ந்து ஈழப் போர் வெடிக்குமென்பதும் திண்ணம்.

எரிக்சோலின் தூதுக்குப்பின்னர் ஈழப்போர் வெடிக்குமாயின் போர்க்களத்தில் ஓர் பகவத் கீதை தோன்றும். அந்தப் பகவத்கீதையே தமிழீழத்தின் அரசியல் யாப்பாக அமையும்.

# சைவசமய விவகாரக் குழுவின் நிர்வாகத்தில் தலையிடும் அதிகாரம் யாழ். முதல்வருக்கு இல்லை

**(4)**

யாழ்: மாநகரசபையின் ஆணையாளராக இருந்த வே: பொ. பாலசிங்கம் வடக்குக் கிழக்கு மாகாண சபை உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவியுயர்வு பெற்றுச் செல்ல அவரின் கதிரைக்கு தணிகாசலம் வந்து சேர்ந்தார்;

அவர் ஆணையாளராகப் பதவியேற்றகையுடன் எப்படியும் டாக்டர் தெய்வேந்திரனை வெளியேற்றச் செய்து சமய விவகாரக் குழுவைப் பறிமுதல் செய்ய வேண்டுமென எண்ணியிருந்தவர்கள் தமது எண்ணத்தைச் செவ்வனே செய்வதற்கு புதிய ஆணையாளரைப் பயன் படுத்தினர்.

### சைவசமய விவகாரக்குழு கலைக்கப்பட்டது?

புதிய ஆணையாளரின் காலத்தில் ஊர்வலம் உண்ணாவிரதமெல்லாம் நடந்து முடிய மாநகரசபைக் கூட்டத்தில் சைவசமய விவகாரக்குழு கலைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்து கலாசார அமைச்சில் பதிவு செய்யப்பட்ட ஓர் சமய அமைப்பை முதல்வர் உள்ளிட்ட சபைக்கு கலைக்கும் அதிகாரம் உண்டா என்பது சட்டப் பிரச்சினை சைவசமய விவகாரக் குழு யாழ். மாநகரசபையினுடையதெனில் அதனை எங்ஙனம் இந்து கலாசார அமைச்சினால் பதிவு செய்ய முடியும்.

★ விதுரன் ★

அந்த அமைப்பு யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரனால் அமைக்கப்பட்டதென்பதும், அது தனிப்பட்ட அமைப்பென்பதும் முதல்வர் உள்ளிட்ட சபைக்குத் தெரிந்திருந்தால் அவர்கள் அக்குழுவைக் கலைக்கும் நிலைக்கு வந்திருக்க மாட்டார்கள்;

அல்லாமல் சைவ சமய விவகாரக் குழு யாழ். மாநகரசபையினுடையதெனில் அவ்வமைப்பு எத்தனையாம் ஆண்டு, எவரால் அமைக்கப்பட்டதென்ற விபரங்களை மாநகரசபை நெஞ்சுத் துணிவோடு வெளிப் படுத்த வேண்டும்;

### நல்லைக் குமரன் மலர் வெளியீடு

மாநகர சபையுடன் இணைந்து செயற்பட்ட சைவ சமய விவகாரக்குழு பண்ணிசைப் போட்டி எழுத்துப் பரீட்சை போன்ற போட்டிகளை நடத்தியதுடன் நல்லைக்குமரன் மலரையும் வெளியிட்டு வந்தது; 93 ம் ஆண்டு முதலாவது மலர் வெளியாகியது ஆரம்பத்தில் மலரின் பதிப்பாசிரியராக தமிழ்மணி தெல்லியூர் செ. நடராசா இருந்தார். பின்னர் அவரின் உடல்நலக் குறைவு காரணமாக பதிப்புரிமை மாற்றப்பட்டது முன்னாள் பதிப்பாசிரியர் ஆலோசகராக இருந்தார். 2001ம் ஆண்டு 9 வது மலரை வெளியிடும்.

### 2001 ஆம் ஆண்டின் மிகப் பெரிய ஜோக்

நிலைமைகள் இவ்வாறு இருக்கும்போது யாழ் மாநகரசபை தற்போது புனரமைக்கப்பட்ட சைவசமய விவகாரக்குழு எனப் பத்திரிகையொன்றில் விளம்பரம் செய்துள்ளது.

## குருக்ஷேத்திரம்

### அகில இலங்கை சைவசமய விவகாரக்குழு

சைவசமய விவகாரக் குழு மாநகர சபையுடன் இணைந்து செயற்படுவது பொருத்துடையதல்ல எனக் கருதியதால்; தனது எல்லைப் பரப்பை விஸ்தீரணப் படுத்தி அகில இலங்கை சைவ சமய விவகாரக்குழு என அமைக்கப்பட்டது. இவ்வாறு அகில இலங்கை ரீதியில் விஸ்தரிக்கப்பட்ட சைவசமய விவகாரக்குழு தொடர்ந்தும் உடைந்த விதியை திருத்த முடியாதவர்கள். உருப்படியாக ஒரு வாகனத்தைக் கூட வைத்திருக்க முடியாதவர்கள் 2001 ம் ஆண்டின் நடுப்பகுதியில் சைவசமய விவகாரக் குழுவை புனரமைப்புச் செய்துள்ளதாக விளம்பரப்படுத்தியுள்ளரெனில் அது 2001ம் ஆண்டின் மிகப்பெரிய ஜோக் காகும்;

[முற்றும்]

# குருநகரில் தேவாலயங்கள், பாடசாலைகள் புனரமைப்புக்கென ரூபா 23 லட்சம் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

குருநகரிலுள்ள புனித யாகப்பர் தேவாலயம் உட்பட அப்பகுதியில் உள்ள நான்கு தேவாலயங்களைப் புனரமைப்பதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 13 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளார்;

மேலும் குருநகரில் உள்ள சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் புதிய கட்டடம் ஒன்றினை அமைப்பதற்கும் அமைச்சர் 10 இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார்.

ஈ பி டி யின்யாழ்மாவட்ட தலைமைச் செயலகத்தில் குருநகர்ப்பகுதியிலுள்ள பல்வேறுபட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து குருநகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்பு, மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி பேச்சு நடாத்தியிருந்தனர்.

இச்சந்திப்பில்: குருநகர் புனித யாகப்பர் தேவாலய புனரமைப்புக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 10 இலட்சம் நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார். மேலும் குருநகரிலுள்ள புதுமை மாதா ஆலயத்திற்கு ஒன்றரை இலட்சம் ரூபாவும் புனித கார்மேல் மாதா ஆலயத்திற்கு 1 இலட்சம் ரூபாவும் புனித ஆரோக்கிய மாதா ஆலயத்திற்கு 75 ஆயிர ரூபாவும் புனரமைப்பு வேலைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இச்சந்திப்பில் பொது அமைப்புக்கள் மற்றும் மக்களின் சார்பில் 37 பேர் கலந்துகொண்டனர் பாராளுமன்ற உறுப்பினர்களான சி. தவராசா, க. வே. குகேந்திரன், ஈ பி டி. பி யின் யாழ் பிரதேச அமைப்பாளர் றீகன் மற்றும ஈ பி. டி. பி பிரமுகர் டேவிஸ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம் பிள்ளை யாழ் வலய கல்விப் பணிப்யாளர் திருமதி மகாலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச-1

# நடத்துநர், சாரதிகள் வெற்றிடம் நிரப்பப்படும்.

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(துன்னாலை)

வடபிராந்தியப்போக்குவரத்துச் சபையில் நிலவும் நடத்துனர், சாரதிகளுக்கான வெற்றிடங்களை நிரப்ப உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்ட 10 புதிய பேருந்துகளை வைபவரீதியாக கையளிக்கும் வைபவம் கடந்த சனிக்கிழமை 9. 30 மணியளவில் அமைச்சு அலுவலகம் முன்பாக இடம்பெற்றது;

இந்நிகழ்வின் பின் அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், வடபிராந்தியப் போக்குவரத்துச்சபை பொது முகாமையாளர் எஸ்: மணிவாசகம், அரச அதிபர் கே. சண்முகநாதன், யாழ்: பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, பாராளுமன்ற உறுப்பினர்களான வி. கே: குகேந்திரன், தவராசா உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மேலும் பேசுகையில்;

மக்களோடு மக்களாக நின்று அவர்களுக்கு சேவை செய்வதையே எமது நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம்:

ஈ. பி. டி: பி. அமைப்புக்கும் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைக்கும் இடையேயான உறவுகள் தேவையேற்படும் போது, மட்டும் பேணப்படும் உறவாக அல்லாமல் தொடர்ந்து இவ் உறவு நிலைத்து நிற்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் சி. தவராசா தமது உரையின் போது; 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு நாம் மீண்டும் வந்தபோது கோண்டாவில் பஸ் சாலையில் 20 பஸ் வண்டிகள் மட்டுமே தரித்து நின்றன. ஆனால் இன்று 110 பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுகின்றன என்றார்.

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம பிரமுகர் சுவாமி சித்ரூபானந்தா, யாழ். பல்கலைக்கழக உப. வேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். அரசஅதிபர் க. சண்முகநாதன் ஆகியோரும் உரையாற்றினர். [க-10-41]

# சீனாவின் எதிரிக்கு அமெரிக்கா வரவேற்பு

(வாஷிங்டன்)

சீனாவின் மற்றுமோர் அரசியல் எதிரியான 'தலாய் லாமா' வுக்கு அமெரிக்கா வரவேற்பளித்ததையிட்டு சீனா கடுங்கோபத்துக்குள்ளாகியுள்ளது;

பல எதிர்ப்புக்களின்மத்தியிலும் சீனா-அமெரிக்க உறவுகளின் இடைவெளி குறைந்து கொண்டு சென்றவேளையில் தலாய்லாமாவுக்கு அமெரிக்கா கொடுத்த வரவேற்பு மேலும் உறவை விரிசலடையச் செய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது:

இதேவேளை சீனாவினால் எதிர்க்கப்படும் தலாய்லாமா நோபல் பரிசு பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது (க-7)

## காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில்

(மந்திகை)

வீதியில் வந்துகொண்டிருந்த வேளை இராணுவ வாகனத்தில் பொருத்தப்பட்ட கேடர் தாக்கியதில காயமடைந்த ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்

கொடிகாமம் பெரிய நாவலடியிலிருந்து இடம்பெயர்ந்து

(8-ம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் - நோர்வே தூதுவர்

# முத்தரப்பினரின் அறிக்கைகள் வெளியாகினால்

# புலிகளின் தடைபற்றிகருத்துக் கூறமுடியாது

### ஐ.தே. கட்சி செயலாளர் கொடித்துவக்கு தெரிவிப்பு

(கொழும்பு)

பேச்சுவார்த்தை தொடர்பான விபரங்களை அரசு, விடுதலைப்புலிகள், நோர்வே ஆகிய முக்கரப்பினரும் உத்தியோக பூர்வமாக வெளியிட்ட பின்பே விடுதலைப்புலிகள் மீதானதனை குறித்து கருத்துகள் தெரிவிக்கப்படுமென ஐக்கியதேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா, விடுதலை புலிகள், ஆகிய இரு தரப்புக்குமிடையே நோர்வே தூதுவர் அடிக்கடி பேச்சு நடத்திவருகிறார். ஆனால் என்ன பேசுகிறார்கள் என்று தெரியாது பேச்சுக்கள்யாவும் மர்மமாகவே உள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பாக நடாத்திவரும் பேச்சுவார்த்தையின் விபரங்களை அரசியல்கட்சிகளுக்கு அரசு தெரியப்படுத்த வேண்டும். இதன்மூலமே புலிகள்மீதான தடையை நீக்கலாமா' இல்லையா என்று தீர்மானிக்க முடியும் என்று கருத்துதெரிவித்த கருணசேன கொடித்துவக்கு, தற்போதைய சூழ்நிலைகளில் இதுதொடர்பாகக் கருத்துக்கூறப்போய் அதனால் ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டால் சமாதானப் பேச்சுவார்த்தையைக்குளப்பி விட்டார்கள் என்று எம்மீது பழிசுமத்துவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ம

## புலிகள் மீதான தடையை மீளாய்வு செய்யவேண்டும்

### இரத்தினபுரிஆயர்கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தின் தேவை முக்கியமாகவுள்ளதால் பிரச்சினையை இருதரப்பினரும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் செயற்படுவது அவசியமாகும்.

இவ்வாறு இரத்தினபுரிமறைமாவட்ட ஆயர் வண. பிதா மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் தம் மீதான தடையை நீக்குமாறு விடுத்த கோரிக்கையை அரசு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

இதேவேளை ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசு என்ற வகையில் புலிகளுக்கு பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவதற்கு சிறந்த சமிக்கை ஒன்றை வழங்குவது நல்லதென்று தாம் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

### தென்மராட்சியில்

பொருட்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டு வருவதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

தாயக மீட்புப் போரில் இழப்புக்களைத் தவிர்ப்பதற்காகவே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### காயமடைந்தவர்..

டன்னாவல சலியர் சந்தியில் வசிக்கும் சாள்ஸ் நவரட்ணம் யேசுதாஸ் [வயது 42] என்பவரேகாயமடைந்தவராவார். (க-23)

### புலிகள் தரப்பில்

தினருடனான எதிர்பாராத மோதலில் வீழுப்புண்ணடைந்த.

● லெப்.கேணல் சோ/சத்தியநாதன் (செல்லத்துரை புவனேஸ்வரன் மன்னார்)

நேற்றுமுந்தினம் சிலோன் தியட்டர் பகுதியில் படையினருடனான எதிர்பாராத மோதலில்

● கப்டன் நிதி (பூபாலபிள்ளை யோகேஸ்வரி மட்டக்களப்பு)

என்றபோராளியும் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)

## தமிழ்க்கட்சி ஜனாதிபதி எம்பிக்களை சந்திப்பார்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக தமிழ்க்கட்சித் தலைவர்களை சந்திரிகா அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்என சிரேஷ்ட அமைச்சர் ஒருவர்தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் சமாதான முயற்சியின் பயனாக அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகவிருக்கும் சமயத்தில் விடுதலைப்புலிகள் மீதானதடை நீக்கத்தை சாட்டாகவைத்து தமிழ்எம்பிக்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஐக்கியதேசியக் கட்சியின் முயற்சிகுறித்து தமிழ்க்கட்சித் தலைவர்களுடனானசந்திப்பின்போது ஜனாதிபதி எடுத்துக்கூறவுள்ளார் என்றும் இதன்மூலம் தமிழ்க் கட்சிஎம்பிக்களை அரசின் பக்கம்இழுக்கலாம் அல்லது அரசுக்குஎதிராக செயற்படுவதைத்தடுக்கலாம் என்றும் அந்தஅமைச்சர் மேலும்தெரிவித்துள்ளார். (ம)

## இன்று கூட்டம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியகுழுக்கூட்டம் இன்றுமாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஜனாதிபதிசந்திரிகா தலைமையில்ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது இக்கூட்டத்தில் தமிழீழவிடுதலை புலிகளுக்கெதிரான தடை தொடர்பாக ஜனாதிபதி எடுத்துக்கூறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### அரசின் அறிவிப்

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசை நம்பிக்கை இல்லாத்தீர்மானம் ஒன்றின் மூலம் கவிழ்த்துவிடலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சி திடமாக நம்பிசெயற்பட்டு வரும் இவ்வேளையில், பாரிய இராணுவநடவடிக்கை ஒன்றினை விடுதலைப்புலிகளுக்கு எதிராக மேற்கொள்வதன் மூலம் ஐக்கியதேசியக்கட்சியின் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முறியடித்துவிடலாம் என்று அரசு கருதுவதாகவும் இராணுவ, அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை எந்த அக்கினிச் சுவாலையும் கொழுந்துவிட்டுளரியப்போவதில்லை என்றும் மிஞ்சுவது உயிரிழப்புத்தான் என்றும் போரினால் சலிப்படைந்துள்ள சமாதான விரும்பிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம

### அரசின்..

சிகள் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

ரெலோ அமைப்பின் தலைவர் ந சிறிகாந்தா கருத்துத் தெரிவிக்கையில் புலிகள் மீதான தடை நீக்கப்பட மாட்டாது என்றஅரசின்அறிவிப்பின்மூலம் சமாதானம் நீண்டதூரம் சென்றுள்ளதாகவும் இனப்பிரச்சினை தீர்வுக்கு இதுவேஆக்கபூர்வமாக எதையும் செய்யப்போவதில்லை என்றும்குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்விடுதலைக் கூட்டணியின்சிரேஷ்ட உபதலைவர் வி.ஆனந்தசங்கரி கருத்து வெளியிடுகையில்.

தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்தத்தை அறிவித்து சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆர்வத்தை வெளிப்படுத்தியபோது அரசு விடுதலைப்புலிகளைத் தடை செய்யுமாறு வெளிநாடுகளை வற்புறுத்திவந்துள்ளது இதன் மூலம் அரசுக்கு இனப்பிரச்சினைதீர்வுவிடயத்தில் ஆர்வம்இல்லை என்பதையே வெளிப்படுத்தி உள்ளதுஎன்று தெரிவித்துதள்ளார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ட்சியின் செயலாளர் கலாநிதி ந. குமரகுருபரன் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடைநீக்கம் ஒரு கௌரவப் பிரச்சினைக்குரியது. 1988ம் ஆண்டு முதல் புலிகள் மீதான தடை அமுலுக்கு வந்தது. அவசரகாலச் சட்டம் பயங்கரவாதச் சட்டம் என்பன அமுலில் இருக்கும் போது புலிகள்மீதான தடைநீக்கம் பாரிய மாற்

### புலிகள் மீதான

பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்துடன் பேசுவதற்கு முன்னதாக சகோதர கட்சிகளுடன் பேச்சு நடத்தவேண்டும்.

அவ்வாறு சகோதரக் கட்சிகளுடன் புலிகள் பேச்சு நடத்தினால் திடமான ஓர்முடிவை அனைத்துத்தமிழ்க்கட்சிகளும் எடுக்க முடியுமென்றும் குறிப்பிட்டார். [ந]

றத்தையோ அல்லது தாக்கத்தையோ ஏற்படுத்தமாட்டாது இந்நிலையில் அரசின் அறிக்கையானது சிங்களப் பேரினவாத சக்திகளைத் திருத்திப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே கருதவேண்டியுள்ளது. என்று தெரிவித்துள்ளார்.

மலையகமக்கள்முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் கருத்துதெரிவிக்கையில் புலிகள் மீதானதடை நீக்கப்படமாட்டாது என்று அரசு அறிவித்திருப்பதின் மூலம் நோர்வேயின் சமாதான முயற்சியில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்றார். (வ)


## லாலா சோப் ஸ்தாபனத்தாரின்

2 வது அதிஷ்டலாபச் சீட்டிழுப்புமுடிவுகள்
( 25 - 05 - 2001 )

| | | | |
|---|---|---|---|
| 1 | வது | அதிஷ்ட இலக்கம் | 5015 |
| 2 | - | - | 4398 |
| 3 | - | - | 4090 |
| 4 | - | - | 5877 |

ஆறுதல் பரிசு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1 | வது | அதிஷ்ட இலக்கம் | 3539 |
| 2 | - | - | 1477 |
| 3 | - | - | 1855 |
| 4 | - | - | 5348 |
| 5 | - | - | 1278 |
| 6 | - | - | 0709 |

பரிசில்களை எமது ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளலாம்

லாலாசோப்தொழிற்சாலை
அச்சுவேலி

(கி - 2032)

நாகம்ஸ்
(சுன்னாகம)
எம். ஜி. ஆர், சரோஜாதேவி நம்பியார் நடித்த
எங்கவீட்டுப் பிள்ளை
11-00, 2-30 பு. நே.
இன்னும் ஒரிரு தினங்களுக்கு மட்டும்.
(கி-2021)

எழில் குன்றா அழகிய தங்க நகைகளை அசல் 22 கரட்டில்
செய்து பெற்றுக்கொள்ள யாழ் நகரில்.....



நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, - - - யாழ்ப்பாணம்.

நியூ லலிதா ஜுவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[கி-2003]

நகுலா நகைமாடம்
241G, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை "வலம்புரி" அச்சக ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் ... 2001 ஆண்டு மே மாதம் 28ம் திகதி ...